**நாள்: 18.03.2026**
**O.S. No. 74/2023**

**பி.சா.1**
**பெயர்: ராமநாதன், த/பெ. சண்முகம்**

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

வாதிகள் என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்து 2ம் பிரதிவாதி கோவிலுக்கு சொந்தமான சொத்து என்றால் சரிதான். தாவா சொத்தை பொறுத்து வா.சா.ஆ. 2 ஆவணம் மூலம் தஞ்சை மாவட்ட செங்குந்தர் மகாஜன சபையில் திருவாரூர் பேரவையின் அப்போதைய தலைவரான காசிநாதன் என்பவரால் இந்த வாதிகளிடம் பரிவர்த்தனை பத்திரம் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டது என்றால் சரிதான். மேங்கூரையை பொறுத்து பதிவு செய்து கொடுக்கப்பட்டது. மேற்படி பதிவு செய்து கொடுக்கப்பட்ட நாள்முதல் தாவா சொத்தில் தான் வாதிகள் குடியிருந்துவருகிறார்கள் என்றால் சரிதான். கோவிலுக்கு செலுத்தவேண்டிய தாவா சொத்திற்கு உரிய பகுதியை வாதிகள் செலுத்தி வருகிறார்கள் என்றால் இல்லை. தாவா சொத்தை பொறுத்து வாதிகளுக்கு எதிராக நாளதுவரை திருக்கோவிலால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை சரிதான். தாவா சொத்தினை வாதிகள் அனுபவம் செய்துவருவதில் இதுநாள் வரை திருக்கோவிலுக்கு ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான். மேல் நடவடிக்கைக்காக ஏற்பாடு செய்துவருகிறோம். தாவா சொத்திற்கு மின் இணைப்பு பெறுவதற்கும் மின் கட்டணம் செலுத்திவருவதற்கும் திருக்கோவிலிடம் உரிய அனுமதி வாதிகள் பெற்றுள்ளார்கள் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி ஆனந்த வாசகனுக்கு தாவா சொத்தை பொறுத்து எவ்வித ஆவணமும்

திருக்கோவிலால் ஏற்படுத்தி கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். திருக்கோவிலின் நேரடி பகுதிதாரர்கள் வாதிகள் என்றால் சரிதான்.

//மேற்படியார் தரப்பில் இன்றைய குறுக்கு விசாரணையின்போது ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.//

MOHAMED BASIL S

Digitally signed by MOHAMED BASIL S
Date: 2026.03.18 18:38:42 +0530